[திரு. இரா. காமராஜ்] [2018 ஜூலை 5

அம்மா அவர்களின் அரசு, 2011 ஆம் ஆண்டு வரை 12 இலட்சத்து 93 ஆயிரம் மெட்ரிக் டன்களாக இருந்த எங்கள் துறையின் கிடங்குகள் கொள்ளளவை கடந்த 7 ஆண்டுகளில், 23 இலட்சத்து 28 ஆயிரம் மெட்ரிக் டன்களாக உயர்த்திக் காட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வராக விளங்கிக் கொண்டிருக்கின்ற அருமைக்குரிய அண்ணன் அவர்கள், எங்கள் உணவுத் துறைக்கு பல்வேறு சிறப்பான அறிவிப்புகளை சிரித்த முகத்துடன் தந்தமைக்கு என் சார்பாகவும், உணவுத் துறையின் சார்பாகவும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு அளந்து பார்த்து, அளவு பார்த்து, திட்டங்கள் தந்த தலைவர்கள் உண்டு. ஆனால், அம்மா அவர்களின் வழியில், மக்கள் அண்ணார்ந்து பார்த்து, அசந்து பார்த்து, அதிசயிக்கும் வகையில் திட்டங்கள் தந்த எங்கள் மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குலம் காத்த, தாயின் நலம் காத்த மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களுக்கு அடிநாதத்திலிருந்து நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். எனது துறை சார்பாக மூன்று முத்தான அறிவிப்புகளைத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களுக்கு என் சார்பாகவும், எனது துறை சார்பாகவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தகவல் கோரல்

(அ) காவல் துறை தலைமை இயக்குநர் நியமனம் மற்றும் பணி நீட்டிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, D.G.P. நியமனங்கள் குறித்து திரு. பிரகாஷ் சிங் வழக்கில் நேற்றுமுன்தினம், அதாவது, 3–7–2018 அன்று சில கண்டிப்பான உத்தரவுகளை உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கிறது. குறிப்பாக,

2018 ஜூலை 5] [திரு. மு.க. ஸ்டாலின்]

சட்டம்–ஒழுங்கு பொறுப்பை கவனிக்கக்கூடிய மாநில காவல் துறைத் தலைவர் பதவிக்கு in–charge D.G.P.–ஐ நியமிக்கக் கூடாது என்று அறிவுறுத்தியிருக்கிறது. அதுமட்டுமல்ல, ஓய்வு பெறக்கூடிய வயதில் இருக்கக்கூடிய D.G.P.–ஐ மாநில சட்டம்–ஒழுங்கு காவல் துறைத் தலைவராக நியமித்து, அவருக்கு பிரகாஷ் சிங் வழக்கின் அடிப்படையில், இரண்டு வருட பதவிக் காலம் வழங்கக் கூடாது என்றும் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

தற்போது D.G.P. ஆக இருக்கக்கூடியவர், 10 மாதங்கள் in–charge D.G.P. ஆக நியமிக்கப்பட்டு, சட்டம்–ஒழுங்கு D.G.P. ஆக இருந்தார். அவர் ஓய்வுபெறும் நாளில் இரவு 11–30 மணிக்கு மீண்டும் முழுநேர காவல் துறை சட்டம்–ஒழுங்கு D.G.P. ஆக நியமிக்கப்பட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, இரண்டு வருட பதவி நீட்டிப்பும் அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, தற்பொழுது இருக்கக்கூடிய D.G.P. அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இரண்டு வருட பதவிக் காலம் என்பது திரு. பிரகாஷ் சிங் வழக்கில் உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே அளித்த தீர்ப்புக்கு முற்றிலும் முரணாக அமைந்திருக்கிறது.

தமிழ்நாடு சட்டம்–ஒழுங்கு காவல் துறைத் தலைவர் பதவிக்கு வர வேண்டும் என்று காவல் துறையில் இருக்கக்கூடிய ஒவ்வொரு இளம் I.P.S. அதிகாரிகளும் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கனவு நிறைவேற முடியாத நிலையில், சட்டம்–ஒழுங்கு D.G.P. ஆக வேண்டிய நியமன வாய்ப்புகள் தட்டிப் பறிக்கப்பட்டிருப்பதாக இப்பொழுது இருக்கக்கூடிய I.P.S. அதிகாரிகளெல்லாம் கருதிக் கொண்டிருக்கிறார்கள். சில மூத்த I.P.S. அதிகாரிகள் D.G.P. பதவி கிடைக்காமலேயே ஓய்வுபெற்றும் போய்க் கொண்டிருக்கிறார்கள். சட்டம்–ஒழுங்கு D.G.P. ஆக ஓய்வு பெற்ற அதிகாரி இருப்பதால், திரு. பிரகாஷ் சிங் வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கக்கூடிய காவல் துறை சீர்திருத்தத்திற்கு இது ஒரு களங்கத்தை அடையாளமாகக் காட்டிக் கொண்டிருக்கிறது.

முற்பகல் 11–40

தற்போது D.G.P. மீதுள்ள ஒரு வழக்குகூட CBI விசாரணையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் ஓய்வு பெறும் நிலையிலிருந்த அவரை D.G.P. ஆக நியமித்து இரண்டு வருடங்கள் பணிக் காலம் வழங்கியிருப்பது தவறு என்பது, உச்ச நீதிமன்றம் கடந்த 3–7–2018 அன்று வழங்கிய தீர்ப்பின் மூலமாக

[திரு. மு.க. ஸ்டாலின்] [2018 ஜூலை 5

நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இனியாவது D.G.P. நியமனத்தில் செய்த தவறை அரசு உணர்ந்து, D.G.P. நியமனத்தை இரத்து செய்து, அண்மையில் வழங்கப்பட்டிருக்கக்கூடிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலே புதிய D.G.P. நியமனத்தை முறைப்படி செய்திட, உச்ச நீதிமன்றம் விரும்பிய காவல் துறையினுடைய சீர்திருத்தத்தை உறுதி செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலே திறமைவாய்ந்த நல்ல காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆனால், குறிப்பிட்ட சிலருக்கு பதவி நீடிப்பு கொடுத்திருக்கிறீர்கள். இதைப்பற்றி உச்ச நீதிமன்றம் ஒரு தெளிவான தீர்ப்பைக் கொடுத்திருக்கிறது. அந்தத் தீர்ப்பிலே இதுபோல பதவி நீடிப்பை இரண்டு வருடங்களுக்கு அதிகமாகக் கொடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறது, ஒன்று; இன்னொன்று ஒரு D.G.P.-ன் பதவிக்காலம் முடிவதற்கு ஏறத்தாழ 3 மாதங்களுக்கு முன்பாக அடுத்தவர் யார் அந்தப் பதவிக்கு வரவிருக்கிறார் என்பதை முடிவு செய்ய வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டில், பல பிரச்சினைகள் இருந்தாலும், காவல் துறையினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துகிறவர் எல்லாவிதப் பிரச்சினைகளுக்கும் அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும். அந்த வகையிலே ஒரு குறிப்பிட்ட நபருக்கு பதவி நீடிப்பு கொடுப்பது என்பது எந்தவிதத்திலே நியாயம்? இதை அரசு கவனமாகக் கையாள வேண்டும். தமிழகத்திலே உள்ள பல பிரச்சினைகளைச் சொல்லலாம். இப்பொழுது நான் அதைச் சொல்வதற்குத் தயாராக இல்லை. பல பிரச்சினைகள் இருக்கின்றன. எந்த வகையிலே திறமையாகச் செயல்பட்டார், எந்தக் காரணத்திற்காக அவருக்கு பதவி நீடிப்பு கொடுக்கிறீர்கள்? அது உங்களுடைய தனிப்பட்ட பொறுப்பாக இருந்தாலும், இன்றைக்கு உச்ச நீதிமன்றம் அதைக் கண்டிக்கிற வகையிலே தீர்ப்பு சொல்லியிருக்கிறது. இதைக் கவனத்தில் கொண்டு, இனிமேல் இந்த அரசு காவல் துறை தலைமை அதிகாரிகளை நியமனம் செய்யும்பொழுது கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

2018 ஜூலை 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை சீர்திருத்தங்கள் தொடர்பாக மாண்பமை உச்ச நீதிமன்றம் திரு. பிரகாஷ் சிங் மற்றும் பலர் தாக்கல் செய்த வழக்கில், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு 3–7–2018 அன்று தன்னுடைய இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளது. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மேற்கண்ட இடைக்கால உத்தரவில் மத்திய அரசின் சார்பில் ஆஜரான* Attorney General *திரு.* K.K. *வேணுகோபால் அவர்கள் வாதிடும்போது, 29 மாநிலங்களில், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்கள் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் முந்தைய வழிமுறைகளைப் பின்பற்றவில்லை என்றும், தமிழ்நாடு உட்பட 5 மாநிலங்கள் மட்டுமே காவல் துறை தலைமை இயக்குநர் நியமனத்திற்கு தேர்வுப் பட்டியலை தயாரிக்க மத்திய பணியாளர் தேர்வாணையத்திற்கு கருத்துருக்களை அனுப்பி வைத்துள்ளன எனவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.*

ஏற்கெனவே நடைமுறையில் இருந்த மாண்பமை உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை பின்பற்றிதான் தமிழ்நாட்டில் காவல் துறை தலைமை இயக்குநர் நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு 3–7–2018 அன்று மேற்படி வழக்கில் மாண்பமை உச்ச நீதிமன்றம் தனது இடைக்கால உத்தரவில் சில வழிமுறைகளை புதியதாக வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு வருங்காலங்களில் இந்த வழிமுறைகளைப் பின்பற்றும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் குழுத் தலைவர் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்குமேல் காவல் துறை தலைமை இயக்குநர் பணியாற்றக் கூடாது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்; அது அவ்வாறு அல்ல. ஒரு காவல் துறை தலைமை இயக்குநர் நியமிக்கப்பட்ட காலத்திலிருந்து தொடர்ந்து அவர்கள் 2 ஆண்டுகாலம் இருக்க வேண்டும் என்பதுதான் முறை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, ஏற்கெனவே D.G.P. *நியமனத்தைப் பொறுத்தவரைக்கும், சட்டதிட்ட விதிகளுக்குட்பட்டுத்தான் நியமனம் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*